STC.No. 798-2025
நாள் 02.02.2026.
P.W.1 – (மரிய டயானா )
எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் நான் வேலை பார்க்கவில்லை. வீட்டில்தான் உள்ளேன். என் மகள் பிறந்த தேதி 05.07.2022 ஆகும். என் திருமண தேதி 09.07.2021 ஆகும். நான் என் திருமணத்திற்கு முன் நகைக்கடையில் விற்பனையாளராக வேலை பார்த்தேன். நான் தாக்கல் செய்த புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆம். பு.சா.ஆ.6 சட்ட அறிவிப்பு என் அறிவுறுத்துதலின் பேரில் வழங்கப்பட்டதா என்றால் ஆம். நான் பு.சா.ஆ.6 சட்ட அறிவிப்பை படித்து பார்த்தேன். இந்த வழக்கு விபரங்கள் அனைத்தும் எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் எனக்கே தெரியும். புகார் மனுவில் நான் குறிப்பிட்டுள்ள STC.No. 516/2023 வழக்கு குறித்து எனக்கு ஏதும் தெரியாது. வழக்கு விபரங்கள் நான் சொல்லி தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த STC.No. 516/2023 விபரம் எதிரிதான் என்னிடம் சொன்னார். இந்த வழக்கு தயார் செய்தபோது எதிரியும் உடன் இருந்தாரா என்றால் இல்லை.

வழக்கு விபரங்கள் ஏதும் நான் வழக்கறிஞருக்கு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சந்தைபேட்டையில் க.எண்.97 ல் குடியிருந்து வருகிறேன். நான், என் கணவர் சூசைமரியான் மற்றும் என் மகன் ரஞ்சித் குமார் ஆகியோர் குடியிருந்துவருகிறோம். நாங்கள் மூவர் தவிர எங்களுடன் வேறு யாரும் குடியிருக்கவில்லை என்றால் சரி. நான் மேற்சொன்ன முகவரியில் பிறந்தது முதல் வசித்து வந்தேன், கடந்த 6 ஆண்டுகளாக அந்த விலாசத்தில் நான் வசிக்கவில்லை. அந்த வீடு இடிந்துவிட்டதால் கடந்த 6 ஆண்டுகளாக அங்கு வசிக்கவில்லை. எதிரி பணம் கேட்டது, அனைத்து சம்பவங்களும் அந்த முகவரியில்தான் நடைபெற்றது. அந்த வீடு கடந்த 8 ஆண்டுகளாக குடியிருப்பு அல்லாத வீடாக உள்ளது என்றால் சரியல்ல, 6 ஆண்டுகளாக அவ்வாறு உள்ளது. நான் அனைத்து வழக்கு விபரங்களும் அந்த வீட்டில் நடைபெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி சந்தைபேட்டை தெருவில் குடியிருந்து வருகிறார் என்றால் சரி. நான் புகாரில் எதிரியின் விலாசம் சந்தைபேட்டை என குறிப்பிட்டு உள்ளேன் என்றால் இல்லை, சீனியாபுரம். எதிரிக்கு சந்தைபேட்டைதான் அவர் குடியிருப்பது சீனியாபுரம். நான் தற்போது கோதை நகரில் குடியிருந்து வருகிறேன். நான் கோதை நகர் திருவில்லிபுத்தூர் நீதிமன்ற வளாகத்திற்கு பின்புறத்தில் உள்ளது. என் கணவரும் என்னுடன் கோதை நகரில் குடியிருந்து வருகிறார். என் தாயார் வேளாங்கண்ணி ரைட்டன் பட்டியில் குடியிருந்து வருகிறார். எனக்கு ரைட்டன் பட்டியில் சொந்தவீடு கிடையாது என்றால் ஆம். என் கணவர் ஆரம்பத்தில் இருந்தே கோதை நகரில் குடியிருக்கிறார் என்றால் சரியல்ல, ரைட்டன் பட்டியில் க.எண்.55ல் குடியிருந்தார். சமீபத்தில் 6 மாதங்களாக கோதை நகரில் குடியிருந்து வருகிறார். கோதை நகரில் கடந்த 6 மாதமாக குடியிருந்து வருகிறேன். நான் என் கணவருடன் என் திருமணம் முடிந்தவுடன் ரைட்டன்பட்டி தெருவில் கடந்த 6 மாதங்களுக்கு முன் குடியிருந்தேன்.

A. maria Dayana.

வழக்கு சம்பவங்கள் க.எண்.55 ரைட்டன் பட்டியில் நடைபெற்றது என்றால் சரியல்ல. எதிரியை நான் அத்தை என அழைப்பேன். எதிரி எனக்கு தந்தை வழி உறவு. எதிரிக்கு 56 வயது. நான் என் புகாரிலும் எதிரியின் வயதை 56 என குறிப்பிட்டு சொன்னேன் என்றால் சரி. எதிரி எனக்கு அத்தை முறை என என் புகாரில் சொல்லவில்லை. வழக்கு STC.No. 516/2023 வில்லிராஜ் என்பவருக்கும் இந்த வழக்கின் எதிரிக்கும் இடையே நடைபெற்றது. அந்த வழக்கு விபரம் குறித்து 05.02.2023 அன்று எதிரி விபரம் சொன்னார். எதிரியும் நானும் ஒரே ஊர் என்பதால் எதிரியை எனக்கு தெரியும். எதிரி ஆசிரியையாக பணி செய்வதால் எனக்கு பழக்கம் என புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் எதிரி ஆசிரியை பணி செய்கிறார். எதிரி என் சிறுவயது முதல் எனக்கு தெரியும். நான் எதிரி எனக்கு என் சிறுவயது முதலே தெரியும் என சொல்லவில்லை என்றால் சரி. எதிரி பணி செய்யும் பள்ளியில் நான் படிக்கவில்லை என்றால் சரி. அவர் பணி செய்யும் பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் யாரையும் எனக்கு தெரியாது என்றால் சரி. எதிரி எனக்கு உறவினர் என்றும் எனக்கு பழக்கமானவர் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எனக்கு 1 மகன், 1 மகள். என் திருமணத்தின் போது என் தாயார் எனக்கு 5 பவுண் நகை போட்டார். நான் வசதியான பிறந்த நபர் என்றால் இல்லை. சாதாரண குடும்பம் தான். என் திருமணத்தின் போது என் பெற்றோர் எனக்கு 5 பவுண் நகை போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் பெற்றோர் வீட்டின் பேரில் ஒரு வழக்கு நடைபெற்றது என்றால் சரி. அந்த வழக்கு எத்தனை ஆண்டுகளாக நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. அந்த வழக்கு எவ்வளவு தொகைக்காக நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. என் கணவர் என் திருமணத்திற்கு முன்பே உறவினர் என்றால் சரி. என் கணவரின் வயது 55 ஆகும். என் வயது 28 ஆகும். என் கணவர் என் அம்மாவிற்கு அந்த வழக்கு நடைபெறுவதற்கு உதவி செய்தார் என்றால் சரி. அதன்பின்தான் பழக்கம் ஆகி எங்கள் திருமணம் நடைபெற்றது என்றால் சரி. எதிரியை நான் வழக்கிற்கு முன் பலமுறை சந்தித்து பேசியுள்ளேன் என்றால் சரி.

வழக்கு சம்மந்தமாக எதிரி எந்த கிழமையில் எத்தனை மணிக்கு என்னை சந்தித்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 05.02.2023 ற்கு முன் எதிரி என்னிடம் வழக்கு சம்மந்தமாக பேசவில்லை. அன்றைய தேதியில் எதிரி சாயந்தரம் வந்தார், மணி ஞாபகம் இல்லை. எதிரி அன்று அவருக்கு பணம் தேவைப்படுவதாகவும் அவருக்கு ஒரு வழக்கு நடைபெறுவதாகவும் அந்த வழக்கிற்காக அவருக்கு பணம் தேவைப்படுவதாகவும் சொன்னார். பொதுவாக, 6 மணிக்கு மேல் கடன் கொடுப்பது வழக்கம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி சந்தைபேட்டை விலாசத்திற்கு நேரடியாக 05.02.2023 அன்று வந்தார். நான் எதிரி அந்த விலாசத்திற்கு நேரடியாக வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி வந்த சமயம் என்னுடன் என் மகன் மட்டும் இருந்தார். எதிரி அவருடன் யாரையும் அழைத்து வரவில்லை. எதிரி என்னிடம் ரூ.2 லட்சம் கேட்டார். நான் தருவதாக சொன்னேன், பணத்திற்கு ஆதரவாக அவரிடம் ஆவணம் கேட்டேன். நான் பணம் கொடுத்தபின்தான் எதிரி புரோநோட்டு கொடுத்தார்.

அந்த தொகை ரூ.2 லட்சம் நான் சேமித்து வைத்த பணம் ஆகும். நான் வேலை பார்த்த சமயம் சேர்த்த பணமாகும். நான் 6 ஆண்டுகளாக திருமணத்திற்கு முன் வேலை பார்த்தேன். நான் 2018 ம் ஆண்டு முதல் 2021 ம் ஆண்டு வரை வேலை பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். என்னிடம் 2021 ம் ஆண்டு என் திருமணத்திற்கு முன்பே

A. maria Dayana

என்னிடம் சேமிப்பு இருந்தது. என்னிடம் அவ்வாறு சேமிப்பு இருந்ததாக சொல்வது என்னை தவிர வேறுயாருக்கு தெரியாது என்றால் ஆம். நான் கடன் கொடுத்த விபரம் வேறு யாருக்கும் தெரியாது என்றால் என் மகனுக்கு தெரியும். என் மகனை விசாரித்தால் அந்த விபரம் தெரியும். அந்த ரூ.2 லட்சம் ரூ.50/-, ரூ.100/-, ரூ.200/-, என சேர்த்து வைத்த தொகை என்றால் ஆம். எதிரிக்கு கடன் கொடுத்த சமயம் அந்த டினாமினேசன் ஆக பணம் கொடுத்தேன் என்றால் அப்படி கொடுக்கவில்லை, 500/- ரூபாய் தாள்களாக கொடுத்தேன். நான் வேலை பார்த்த நகை கடையின் பெயர் எஸ்.எம்.டி தங்க நகை மாளிகை. நான் வேலை பார்த்தபோது சம்பளம் ஒன்பது ரூபாய் வாங்கினேன். நான் ஆரம்பம் முதல் இறுதி வரை அந்த தொகை தான் சம்பளம் வாங்கினேன்.

அந்த தொகையில்தான் குடும்ப செலவும் பார்த்து வந்தேன் என்றால் சரி. என் உடன்பிறந்த என் தம்பி ஒருவர் மற்றும் என் தங்கை ஒருவர் ஆவார். அவர்களையும் சேர்த்துதான் நான் பராமரித்து வந்தேன் என்றால் என் தங்கைக்கு முன்னரே திருமணம் ஆகிவிட்டது. என் தம்பி 10ம் வகுப்பு படித்துள்ளான். நான் அவர்களை பராமரித்து வந்ததால் என் வருமானம் மொத்தமும் செலவாகிவிடும் என்றால் சரியல்ல, அனைவரும் வேலை பார்த்தோம். நான் வேலை பார்த்த நகை கடையை விசாரித்தால் அந்த விபரம் தெரியவரும் என்றால் சரி. நான் அவ்வாறு விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் ஆம். என்னிடம் ரூ.2 லட்சம் மொத்தமாக இருந்ததாக காட்டக்கூடிய ஆவணம் ஏதும் இல்லை என்றால் ஆம். நான் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளேன். அந்த வங்கி கணக்கில் நான் அதிகபட்சமாக எவ்வளவு ரூபாய் வைத்திருப்பேன் என்றால் எழுபது ரூபாய், எண்பது ரூபாய் பணம் வைத்திருந்தேன். நான் அதற்கு மேல் என் வங்கி கணக்கில் வைத்திருக்கவில்லை என்றால் ஆம். நான் என் வங்கி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் இல்லை. நான் எதிரியிடம் பணம் கொடுக்கும்போது என்ன என்ன ஆவணங்கள் கேட்டேன் என்றால் சொத்து ஆவணங்கள் கேட்டேன் அவர் புரோநோட்டு மட்டும் கொடுத்தார்.

நான் பணம் கொடுத்ததை காட்டக்கூடிய ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் புகைப்படம் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு வங்கி கணக்கு என் பள்ளி படிப்பு காலத்தில் இருந்தே உள்ளது. அந்த புரோநோட்டில் எதிரி என்ன காரணத்திற்காக பணம் வாங்கினார் என எழுதவில்லை என்றால் சரி. புரோநோட்டில் எதிரியுடைய முந்தைய வழக்கு விபரம் எழுதவில்லை. எதிரி ரூ.2 லட்சத்தை வில்லிராஜிக்கு செலுத்தவேண்டி வாங்கினார். வில்லிராஜ் வந்திருந்தார் என்றால் வரவில்லை. வில்லிராஜ் வீட்டில் இருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் ஆம். வில்லிராஜ் எனக்கு உறவினர் என்றால் இல்லை. எனக்கு அவரை தெரியும். எதிரி சொன்னவுடன் நான் வில்லிராஜிடம் சென்று விசாரித்து உண்மையை தெரிந்து கொண்டேன் என்றால் ஆம். என் கணவர் வீட்டிற்கும் வில்லிராஜ் வீட்டிற்கும் 2 அல்லது 3 வீடு தான் இடைவெளி என்றால் இல்லை, 2 தெரு தள்ளி உள்ளது. நான் வில்லிராஜிடம் சென்று விபரம் கேட்டபின்தான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். நான் எதிரிக்கு இதற்கு முன் பணம் கொடுத்து வாங்கி பழக்கம் இல்லை என்றால் சரி.

எதிரிக்கு இதற்கு முன் பணம் கொடுத்து பழக்கம் இல்லாததால் நான் எதன் அடிப்படையில் பணம் கொடுத்தேன் என்றால் எதிரி 2மாதத்தில் திருப்பி தருவதாக

A. maria [signature]

சொன்னதாலும் அவர் ஆசிரியை பணி செய்வதாலும் பணம் கொடுத்தேன். நான் என் ஊரில் வேறு யாருக்கும் பணம் கொடுத்தது இல்லை. நான் இந்த வழக்கு தவிர வேறு வழக்கு தாக்கல் செய்யவில்லை. நான் 500 ரூபாய் தாள்கள் 400 எண்ணம் கொடுத்தேன். நான் சம்பவத்தின்போது குடியிருந்த வீட்டில் பச்சை பெயிண்ட் அடித்துள்ளேன். 400 தாள்களையும் 2 கட்டுகளாக கொடுத்தேன். பு.சா.ஆ.1 புகைப்படத்தில் காணப்படும் வீடு சந்தைபேட்டை க.எண்.97 ஆகும். பொதுவாக ஒரு பணக் கட்டு 100 தாள்களை கொண்டிருக்கும் என்றால் சரி. பு.சா.ஆ.1 புகைப்படத்தில் புகார்தாரர், எதிரி மற்றும் புகார்தாரரின் மகன் தவிர வேறு யாரும் இல்லை. பு.சா.ஆ.1 புகைப்படம் என் மகன் செல்போனில் எடுக்கப்பட்டது. அந்த செல்போன் எண் எனக்கு தெரியாது. அந்த செல்போனை பார்த்தால் தேதி, நேரம் தெரியும் என்றால் சரி. அதேபோல் கட்டுகளின் எண்ணிக்கையும் தெரியவரும் என்றால் சரி. பு.சா.ஆ.1 புகைப்படத்தில் 2 கட்டுகள்தான் காணப்படுகிறது என்றால் அதில் 2 கட்டுகள் தான் காணப்படகிறது. நான் 2 லட்சம் கொடுத்தேன். என் மகனை விசாரித்தால் அது 2 கட்டா அல்லது 4 கட்டா என்று விவரம் தெரியவரும் என்றால் ஆம்.

பு.சா.ஆ.1 புகைப்படம் எந்த கடையில் பிரிண்ட் செய்யப்பட்டது என்றால் நாங்கள் வீட்டிலேயே பிரிண்டு செய்தேன். நான்தான் பிரிண்ட் எடுத்தேன். நான் கடையில் சென்று பிரிண்ட் செய்யவில்லை. அந்த புகைப்படத்தில் என் கையில் குழந்தை இருந்தது. சாட்சி தற்போது புகைப்படம் எடுத்தது அவர் மகன் என தற்போது சொன்னார். பு.சா.ஆ.1 புகைப்படத்தில் விலாசம் காணப்படவில்லை என்றால் சரி. பு.சா.ஆ.1 புகைப்படம் எங்கள் வீட்டில் வைத்து எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சந்தைபேட்டை 97 ம் எண் வீட்டில் வைத்து எடுக்கப்பட்டது. நான் என் மகன் மூலமாக பு.சா.ஆ.1 புகைப்படத்தை நிருபிக்க தயாராக உள்ளேன் என்றால் சரி. பு.சா.ஆ.1 புகைப்படம் எதிரி பணத்தை திருப்பி செலுத்திய சமயம் எடுக்கப்பட்ட படம் என்றால் சரியல்ல. பு.சா.ஆ.1 புகைப்படம் ரைட்டன்பட்டியில் வில்லிராஜ் வீட்டில் எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வில்லிராஜை விசாரித்தால் அந்த தொகை ரூ.1 லட்சமா அல்லது ரூ.2 லட்சமாக என்ற விபரம் தெரியவரும் என்றால் சரி. பு.சா.ஆ.2 புரோநோட்டில் எதிரியின் அப்பா பெயர் சூசை என சொல்லப்பட்டுள்ளது. பு.சா.ஆ.2 புரோநோட்டை எதிரிதான் வாங்கிவந்தார். எதிரியின் கணவர் பெயர் என்ன என்றால் முழு பெயர் தெரியாது, சேவியர் என தெரியும். எதிரி அவர் கையொப்பத்தில் இனிசியல் ஏ என எழுதி கையொப்பம் செய்திருந்தார்.

எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பில் எதிரியின் கணவர் சேவியர் என குறிப்பிட்டு அனுப்பினேன். பு.சா.ஆ.2 புரோநோட்டு என் முன்னிலையில் எழுதப்பட்டது. பு.சா.ஆ.2 புரோநோட்டை எதிரியாகவே எழுதினார். நான் சொல்லி எழுதவில்லை. பு.சா.ஆ.2 புரோநோட்டில் சாட்சியாக எதிரியின் கணவர் சேவியர் கையொப்பம் செய்தார். வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. அன்றை தினம் சேவியரும் அங்கு இருந்தார் என்றால் இல்லை. எதிரி அவர் கணவரிடம் கையொப்பம் வாங்கி வந்திருந்தார். நிரப்புவதற்கு முன் சேவியரிடம் கையொப்பம் பெற்றிருந்தார் என்றால் சரி. பொதுவாக, சாட்சியிடம் அனைத்து நடவடிக்கையும் முடிந்தபின் கையொப்பம் பெறுவார்கள் என்றால் ஒவ்வொருவர் அவ்வாறு செய்வார்கள். பு.சா.ஆ.2 புரோநோட்டில் 1 ரூபாய் ரெவன்யு ஸ்டாம்ப் 2 ஒட்டியிருந்தார்கள். எதிரி ரெவன்யு ஸ்டாம்பிற்கு மேல் கையொப்பம் செய்திருந்தார். சாட்சி என்ற இடத்திலும் ஒரு கையொப்பம் செய்திருந்தார். பு.சா.ஆ.2 புரோநோட்டில் கையொப்பம் மட்டும் செய்திருந்தார் என்றாலும் மற்ற

A. maria Dyan.

விபரங்களை நாங்கள் நிரப்பி கொண்டோம் என்றாலும் சரியல்ல.

பு.சா.ஆ.2 புரோநோட் கொடுத்த சமயமே காசோலை மற்றும் கடிதம் கொடுத்தார் என்றால் சரியல்ல. 2 மாதம் கழித்து நான் பணம் கேட்டபோதுதான் காசோலை மட்டும் கொடுத்தார். கடன் கொடுத்த சமயம் 2 ரூபாய் வட்டி பேசினோம். 2 மாத வட்டியை எடுத்துக் கொண்டு பணம் கொடுத்தோம் என்றால் இல்லை, ஒரு மாத வட்டியை தான் எடுத்துக் கொண்டு பணம் கொடுத்தோம். பு.சா.ஆ.3 காசோலையில் எதிரி அவர் இனிசியல் ஏ என கையொப்பம் செய்து கொடுத்தார். பு.சா.ஆ.3 காசோலையை எதிரி நிரப்பவில்லை என்றால் சரியல்ல. அவர்தான் நிரப்பினார். பு.சா.ஆ.3 காசோலையில் எதிரியின் கையொப்பத்திற்கும் ஏனைய எழுத்துகளுக்கும் வேறுபாடு காணப்படுகிறது என்றால் வேறுபாடு காணப்படவில்லை. பு.சா.ஆ.2 புரோநோட்டு பணம் கொடுத்தற்கு மறு நாள் எடுத்துக் கொடுத்தார். புரோநோட்டு 05.02.2023 அன்று கொடுத்தார். பு.சா.ஆ.2 புரோநோட்டு மறு நாள் கொடுத்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பு.சா.ஆ.3 காசோலையில் உள்ள பெயர், தொகை விபரங்கள் ஸ்மால் லெட்டரில் நிரப்பி கொடுத்தார் என்றால் ஆம். பு.சா.ஆ.3 காசோலையில் எதிரி கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தார்கள் என்றாலும் தொகை, பெயர் மற்றும் தேதி விபரங்கள் வெவ்வேறு நாட்களில் வெவ்வேறு ஆட்களை விட்டு நான் நிரப்பி கொண்டேன் என்றாலும் சரியல்ல.

பு.சா.ஆ.2 புரோநோட்டு எழுதிக் கொடுத்தபின் 2 மாதம் கழித்து நான் எதிரியை சந்தித்து பணம் கேட்டேன். நான் சீனியாபுர விலாசத்திற்கு சென்று பணம் கேட்டேன். நான் பணம் கேட்ட தேதி 02.10.2024 ஆகும். அன்றுதான் எதிரி காசோலை கொடுத்தார். அந்ததேதி என்ன கிழமை என்று எனக்கு ஞாபகம் இல்லை. 2 மாதம் கழித்து கேட்ட அன்றுதான் காசோலை கொடுத்தார். பணம் தேதி கொடுத்த தேதிக்கும் காசோலை கொடுத்த தேதிக்கும் இடைப்பட்ட காலம் 5, 6 மாதங்கள் இருக்கும். நான் சொன்ன தேதியில் காசோலை கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பு.சா.ஆ.3 காசோலையை நான் 1 மாதம் கழித்து வசூலுக்கு தாக்கல் செய்தேன். 2024 ம் ஆண்டு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன். மாதம் நினைவில்லை, தேதி 22 ஆகும். நான் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்த செலுத்து சீட்டை வைத்துள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

காசோலையை நான் வசூலுக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் என் கணவர் சூசைமரியான் வசூலுக்கு தாக்கல் செய்தார் என்றாலும் சரியல்ல. என் கணவர் சூசைமரியான்க்கும் எதிரிக்கும் வரவு செலவு இருந்தது என்றால் இல்லை. என் கணவரின் கையொப்பம் தெரியும் என்றால் ஆம். எதிரிக்கும் சூசைமரியானுக்கும் 2020 ம் ஆண்டு முதல் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. காசோலை வங்கியில் என்று திருப்பப்பட்டது என்றால் 22.12.2024 ஆகும். வழக்கறிஞர் அறிவிப்பு 07.03.2025 அன்று கொடுத்தேன். எதிரி பதில் அறிவிப்பு அனுப்பிய தேதி ஞாபகம் இல்லை. சட்ட அறிவிப்பு அனுப்பிய பின் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு செல்லவில்லை என்றால் இல்லை, ஒரு முறை சென்றேன். வழக்கு தாக்கல் செய்த தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 2024 ம் ஆண்டு தாக்கல் செய்தேன். என் கணவர் சூசைமரியான் தூண்டுதலின் பேரில் சட்ட அறிவிப்பு மற்றும் புகார் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என் கணவரின் செல்போன் எண்.9585331820 ஆகும். 01.07.2024 அன்று எதிரி என் கணவர் செல்போன் கணக்கிற்கு ரூ.10,000/- அனுப்பினார் என்றால்

A. maria Dayan

எனக்கு தெரியாது. 30.12.2023 அன்று எதிரி சூசைமரியான் மெட்ச்வொர்க் கணக்கிற்கு ரூ.6,000/- அனுப்பினார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் அந்த விபரங்களை தெரிவித்து இருந்தார் என்றால் நான் பதில் அறிவிப்பை படிக்கவில்லை. எதிரி என்னை சந்தித்து கடன் கேட்டதாக சொல்லும் தேதி தவறு என்றால் சரியல்ல. எதிரி ரூ.2 லட்சம் வாங்கிக் கொண்டு 1 மாதத்திற்கு முன்பே வெற்று காசோலை, வெற்று புரோநோட்டு மற்றும் கடிதம் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. அந்த சமயம் நான் புகைப்படம் எடுத்தேன் என்றால் சரியல்ல. நான் அந்த புகைப்படத்தை தாக்கல் செய்யாமல் எதிரி ரூ.1 லட்சம் திருப்பி கொடுக்கும்போது எடுத்த புகைப்படத்தை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. ரூ.1 லட்சம் திருப்பி கொடுத்தது வில்லிராஜின் வீட்டில் வைத்து நடந்தது என்றால் சரியல்ல. நான் உண்மையில் பணத்தை திரும்ப பெறவில்லை என்றால் 19 மாதங்கள் காத்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. நான் எதிரி திரும்ப செலுத்திய ரூ.1 லட்சத்தை மறைத்துவிட்டு ரூ.2 லட்சத்திற்கு காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய பணத்தை திரும்ப செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. 05.02.2023 அன்று எதிரி கடன் வாங்கிய தேதியில் இருந்து ஒவ்வோரு மாதமும் ரூ.10,000/- செலுத்தி வந்ததால் நாங்கள் 19 மாதங்களாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுக் கொண்டபடியால் ஒவ்வோரு மாதமும் ரூ.10,000/- நேரடியாக கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி பணத்தை ஜிபேவில் அனுப்புவதாக கூறிக் கொண்டு ஜிபேவில் பணம் அனுப்பினால் எதிரி மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துவிடுவதாக நான் மிரட்டியதால் எதிர மேற்சொன்னவாறு பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

நான் கதவு எண்.97, சந்தைபேட்டை விலாசத்தில் வைத்து பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அதிக வட்டி வசூல் செய்யவேண்டி என் கணவர் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை சட்டப்படியான கடனிற்கு கொடுக்கப்பட்ட காசோலை அல்ல என்றால் சரியல்ல. எதிரி எனக்கு வழக்கு காசோலை தொகை கொடுக்கவேண்டியது அல்ல என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

A. Maria Dayan.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

2/2/26

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.